# LEADER

எல்லைகளைத் தாண்டி...

இதழ் 20 மார்கழி 2018



"What we need to do is always look into the future."

- Jeff Bezos, Founder of Amazon

முகாமைத்துவ துறை
வர்த்தகமுகாமைத்துவ பீடம்
கிழக்குப்பல்கலைக்கழகம், இலங்கை.
2018

ISSN 2279-3305

# ஆசிரியர் செய்தி

‘‘லீடர்’’ எனும் எமது சஞ்சிகையின் இருபதாவது இதழூடாக உங்களை மீண்டும் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி. கடந்த சஞ்சிகையில் பலரும் பலவித கருத்துக்களையும், ஆக்கபூர்வமான ஆலோசனைகளையும் தந்து எம்மை ஆதரித்திருந்தீர்கள். அனைத்து லீடர் ஆர்வலர்களுக்கும் எம் நன்றிகள்.

இந்த இதழில் க.பொ.த உயர்தர மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், மற்றும் வங்கி ஊழியர்கள் போன்றோரையும் கருத்திற்கொண்டு ஆக்கங்களை வெளியிடுகின்றோம். தொடர்ந்து உங்களின் ஆதரவு எமக்குக்கிட்டும் என்னும் உறுதியான நம்பிக்கையில் இவ் இதழை உங்களின் கரங்களில் தவழவிடுகின்றோம்.

**ஆசிரியர்**
**திரு. ரா. கிஷோகுமார்**
**விரிவுரையாளர் (தகுதிகாண்)**
**முகாமைத்துவ துறை**

தங்களின் கருத்துக்கள் ஆலோசனைகள், விமர்சனங்கள் அனுப்ப வேணடிய முகவரி:

**ஆசிரியர்,**
**‘‘லீடர்’’ சஞ்சிகை,**
**முகாமைத்துவ துறை,**
**வர்த்தக முகாமைத்துவ பீடம்,**
**கிழக்குப் பல்கலைக்கழகம்**

**ஆசிரியர்**
திரு. ரா. கிஷோகுமார்
விரிவுரையாளர்
(தகுதிகாண்)
முகாமைத்துவ துறை

**ஆலோசனைக் குழு**

**கலாநிதி. அ. அன்ரூ,**
சிரேஸ்ட விரிவுரையாளர்

**கலாநிதி. டீ. பிரபாகரன்.**
சிரேஸ்ட விரிவுரையாளர்

**திருமதி. பா. கென்னடி**
சிரேஸ்ட விரிவுரையாளர்

**கலாநிதி. அ. அருள்ராஜா,**
சிரேஸ்ட விரிவுரையாளர்

**திருமதி. எல். டி. விக்ரர்**
சிரேஸ்ட விரிவுரையாளர்

**திருமதி. டி. தவக்குமார்**
சிரேஸ்ட விரிவுரையாளர்

**கணணி நெறியாளர்**
கணேசன் சுகன்யா,
உதவி விரிவுரையாளர்,
முகாமைத்துவ துறை

## உள்ளடக்கம்


### 1. உள்நாட்டு வெளிநாட்டு வியாபாரக்கருமங்கள்

கதிரேசன் பௌரணி ,
உதவி விரிவுரையாளர்,
வர்த்தக முகாமைத்துவ பீடம்,
கிழக்கு பல்கலைக்கழகம், இலங்கை.

### 2. சர்வதேச ஒப்பந்தங்களும் நிதி அமைப்புக்களும்

கணேசன் சுகன்யா,
உதவி விரிவுரையாளர்,
வர்த்தக முகாமைத்துவ பீடம்,
கிழக்கு பல்கலைக்கழகம், இலங்கை.

### 3. மனிதவள முகாமைத்துவத்தின் தொழிற்பாடுகள்

கதளுவாகே சமிலா தில்ருக்சி & கதிரேசன் பௌரணி
உதவி விரிவுரையாளர்,
வர்த்தக முகாமைத்துவ பீடம்,
கிழக்கு பல்கலைக்கழகம், இலங்கை.

### 4. இலங்கையின் பொருளாதாரத்தில் சிறிய நடுத்தரளவு வணிகங்களின் பங்களிப்பு

அப்புகாமி ஆராசிலாகே சந்திரா குமாரி & கணேசன் சுகன்யா
உதவி விரிவுரையாளர்,
வர்த்தக முகாமைத்துவ பீடம்,
கிழக்கு பல்கலைக்கழகம், இலங்கை.

# உள்நாட்டு வெளிநாட்டு வியாபாரக்கருமங்கள்

# Domestic Trade and Foreign Trade

கதிரேசன் பௌரணி,
உதவி விரிவுரையாளர்,
வர்த்தக முகாமைத்துவ பீடம்,
கிழக்கு பல்கலைக்கழகம், இலங்கை.

உற்பத்திகள் அல்லது பொருட்கள் சேவைகளைக் கொள்வனவு செய்தலும் விற்பனை செய்தலும் வியாபாரம் என எளிமையாகக் கூறமுடியும். அத்தோடு வியாபாரத்தில் உற்பத்தியின் உரிமையானது ஒரு தரப்பினரிடமிருந்து மற்றொரு தரப்பினருக்குக் கைமாற்றப்படுகிறது. இவ்வுரிமை மாற்ற முறையானது பண்டமாற்று முறையிலும் காணப்பட்டது. பொருட்கள் ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு சென்றபோது உரிமைமாற்றம் இடம்பெற்றது. பிற்காலத்தில் பணம் பரிமாற்று ஊடகமான பின்னர் உற்பத்தியின் உரிமை மாற்றத்தின் போது பணம் செலுத்தப்பட்டது. அதனடிப்படையில் “பொருள் சேவைகளின் உரிமை மாற்றத்துடன் நிகழும் கொள்வனவும் விற்பனையும் வியாபாரமாகும்”.

அதேபோல் வியாபாரமானது சிறிய அல்லது சில்லறை வியாபாரமாகவும், பெரிய அளவு அல்லது மொத்த வியாபாரமாகவும் நடைபெற முடியும். அதேபோன்று வியாபாரமானது நாட்டுக்குள்ளும் நாடுகளுக்கிடையிலும் நடைபெற முடியும். இதனடிப்படையில் வியாபாரத்தினை பின்வருமாறு வகைப்படுத்த் முடியும்.



**உள்நாட்டு வியாபாரம்**

உள்நாட்டு வியாபாரம் என்பது ஒரு நாட்டின் எல்லைக்குள் உள்ள உள்நாட்டு பொருட்கள் சேவைகளின் பரிமாற்றம் ஆகும். இது சில்லறை வியாபாரம் மற்றும் மொத்த வியாபாரம் என இரு பிரிவுகளுக்குள் உட்படுத்தப்படுகிறது. சில்லறை வியாபாரம் என்பது இறுதி நுகர்வோருக்கு பொருள்களை விற்பனை செய்தல் ஆகும். 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இருந்து சில்லறை வியாபாரத்தில் பல்வேறு மாற்றங்கள் நிகழ்ந்தவண்ணம் இருக்கின்றன. சிற்றளவு சில்லறை வியாபாரத்திலிருந்து பேரளவான சிறப்புச்சந்தை சில்லறை வியாபாரம் வரை பல்வேறு வகையான சில்லறை வியாபார வகைகள் சந்தையில் காணப்படுகின்றன.

சிறப்புச்சந்தை சில்லறை வியாபாரமானது நுகர்வோர் விரும்பும் முறையில் பொருள்களைத் தெரிவுசெய்து கொள்ளக் கூடிய விதமாக இவ்வணிக நிலையங்கள் ஒழுங்கமைக்கப்பட்டிருக்கும். ஆரம்ப காலங்களில் மேற்குலக நாடுகளில் பிரசித்தி பெற்றுள்ள இக்கடைகள் தற்போது இலங்கையிலும் பிரசித்தி பெற்றுள்ளது. உதாரணமாக, Cargills food city மற்றும் Keels super market என்பவையாகும்.

மொத்த வியாபாரம் என்பது மீள் விற்பனை நோக்குடன் செய்யப்படும் கொள்வனவு ஆகும். அத்தகைய கொடுக்கள் வாங்களின் போது விற்பனையில் ஈடுபடுபவர் மொத்த வியாபாரி எனப்படுவார். உற்பத்தியாளர்களுக்கும் சில்லறை வியாபாரி அல்லது நுகர்வோருக்குமிடையில் மொத்த வியாபாரி நடுவராகவும் கடமையாற்றுவார். தனது ஆற்றலுக்கும் தேவைக்கும் ஏற்ப மொத்த வியாபாரிகள் பல கருமங்களைப் புரிகின்றனர். உதாரணமாக, கொள்வனவு செய்தல் (Buying), விற்பனை செய்தல்(Selling), களஞ்சியப்படுத்துதல்(Storing), போக்குவரத்துச் செய்தல்(Transporting), சந்தை ஆராய்ச்சி செய்தல்(Market Research), பொருள்களை வகைப்படுத்தல்(Grading), நிதியிடல்(Financing), இடரை தாங்கிக்கொள்ளல்(Risk taking), மேம்படுத்தல் கருமங்களில் ஈடுபடுதல்(Promoting).

உற்பத்தியாளரிடமிருந்து நுகர்வோரிடம் பொருள்கள் செல்லும் வரை விநியோகப்பணிகளில் பங்குகொள்ளும் பல நடுவர்களைக் காணமுடியும். அவர்களை மொத்த வியாபாரிகள், சில்லறை வியாபாரிகள்,முகவர்கள், தரகர்கள், ஏலவர் என வகைப்படுத்த முடியும். நடுவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் போது பொருள்களின் விலையும் அதிகரிக்கும். ஆகையால் விநியோகப்பணிகளில் ஈடுபடும் நடுவர்களின் எண்ணிக்கையைக் குறைத்துக்கொள்ளுதல் நுகர்வோருக்கு மட்டுமின்றி உற்பத்தியாளர்களுக்கும் அனுகூலமாகும்

**விநியோக வழிமுறை (நுகர்வு பொருட்களுக்கு)**




ஒரு நாட்டில் உள்ள உள்நாட்டு வர்த்தகத்தின் முக்கியத்துவமானது அந்நாட்டிற்குள் உள்ள பொருட்கள் சேவைகளின் பரிவர்த்தனைக்கு உதவுகின்றது. இவ்வாறு செய்வதனூடாக நாட்டின் உற்பத்தி காரணிகள் சரியான முறையில் வளப்பயன்பாட்டிற்கு உற்படுத்தப்படுவதுடன் பொருளாதார வளர்ச்சியினையும் உறுதி செய்கின்றது.

நாடு முழுவதும் காணப்படும் பொருட்கள் சேவைகள் நாட்டிலுள்ள அனைத்து பகுதிகளுக்கும் சென்றடைவதன் மூலம் மக்களின் வாழ்க்கைத்தரத்தையும், நாட்டின் வேலைவாய்ப்பு விகிதத்தையும், தொழில் முயற்ச்சியாண்மையையும் மேம்படுத்துகிறது.

**வெளிநாட்டு வியாபாரம்**

ஒரு நாடு மற்றொரு நாட்டுடன் அல்லது நாடுகளுடன் வியாபாரக் கருமங்களில் ஈடுபடுதல் வெளிநாட்டு வியாபாரம் எனப்படும். இது சர்வதேச வர்த்தகம் எனவும் கூறப்படும். குறித்த நாட்டின் எல்லையைத் தாண்டி பொருள்கள் விற்பனைக்காகப் போக்குவரத்துச் செய்யப்படும். வேறு எந்த ஒரு நாட்டின் உதவியும் இல்லாமல் தமது நாட்டிற்கு அவசியமானவற்றை தாமே உற்பத்தி செய்வது சுய உற்பத்தி எனப்படும். ஆனால் இன்றுள்ள நிலையில் அவ்வாறான சுய உற்பத்தி முறைகள் மிகக் குறைவாகவே உள்ளன.

வெளிநாட்டு வியாபாரமானது இரு பிரிவுகளாக பிரிக்கப்படும். அவை, ஏற்றுமதி வியாபாரம் மற்றும் இறக்குமதி வியாபாரம் ஆகும். ஒரு நாடு மற்றொரு நாட்டிற்குப் பொருட்களை விற்பனை செய்தல் ஏற்றுமதி எனப்படும். ஒரு நாடு மற்றொரு நாட்டிலிருந்து கொள்வனவு செய்தல் இறக்குமதி செய்தல் என அழைக்கப்படும். இன்று எல்லா நாடுகளுமே ஏற்றுமதி வியாபாரம் மற்றும் இறக்குமதி வியாபாரம் ஆகியவற்றில் ஈடுபட்டுகொண்டிருக்கின்றன.

சர்வதேச வர்த்தகத்தில் பின்வரும் காரணிகள் பாரியளவு செல்வாக்கு செலுத்துகின்றது. அவை, உற்பத்தி, விலை, இடம், தேர்வு அல்லது விருப்பம் மற்றும் மேம்படுத்தல். சில நாடுகளில் வரையறுக்கப்பட்ட அளவிலான உற்பத்தி செய்ய முடியாத பொருள்கள் வேறு சில நாடுகளில் இருக்க முடியும். பொருள்கள் சேவைகளின் உற்பத்திகளுக்கு ஏற்படும் கிரயம் நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றது. மூலப்பொருள்கள், உழைப்பு, மூலதனம்,, எரிபொருள், வரி போன்றவற்றுக்குச் செலுத்த வேண்டிய கிரயங்கள் சில நாடுகளில் மிகக் குறைவாகும். இதனால் கிரயம் உயர்ந்த மட்டத்தில் காணப்படும் நாடுகள் அப்பொருளை உற்பத்தி செய்யாது கிரயம் குறைவாக காணப்படும் நாடுகளிலிருந்து கொள்வனவு செய்து கொள்ளும்.

நாடுகளுக்கிடையிலான, தூரம் மற்றும் கிட்டிய தன்மை சர்வதேச வர்த்தகத்தில் செல்வாக்குடையது. சர்வதேச வர்த்தகத்தில் போக்கவரத்துச் செலவு அதிகரித்துக்கொண்டே வருகின்றது. எனவே தூர நாடுகளிலிருந்து பொருட்களை கொள்வனவு செய்யாமல் அண்மை நாடுகளிலிருந்து பொருட்களை கொள்வனவு செய்வதன் மூலம் போக்குவரத்துச் செலவினை குறைத்துக்கொள்ள முடியும். சில நாடுகள் சில பொருட்கள் உற்பத்தியில் விஷேடத்துவம் காட்டுகின்றன. இதனால் இப் பொருட்கள் தரத்தில் உயர்ந்தவையாகும்.

**உசாத்துணைகள்**


- *Bandaranayaka J.& Sivanesaraja A.,2008 Business Studies*
- *http://howtoexportimport.com/Domestic-trade-Means-8545.aspx*
- *http://kalyan-city.blogspot.com/2011/03/what-is-foreign-trade-types-and.html*

# சர்வதேச ஒப்பந்தங்களும் நிதி அமைப்புக்களும்

# International Trade Agreements and Financial Organizations

கணேசன் சுகன்யா,
உதவி விரிவுரையாளர்,
வர்த்தக முகாமைத்துவ பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

தற்கால நவீன உலகில் பொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி என்பவற்றுக்கு சர்வதேச ஒப்பந்தங்கள் மற்றும் நிதியமைப்புக்களின் பங்களிப்பு இன்றியமையாததாகும். உலகமயமாக்கம் காரணமாக பிராந்திய பொருளாதார சமூகங்களினது தோற்றமானது அண்மைக்காலங்களில் முக்கியமானதொன்றாகக் காணப்படுகின்றது. ஒரு நாட்டின் பல்வேறு குழுவினரிடையே அல்லது சர்வதேச குழுவினரிடையே உறுப்பினர்களது நலன்களை முன்னேற்றுவதை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச வர்த்தக ஒப்பந்தங்கள் உருவாக்கப்பட்டன. அவ்வர்த்தக ஒப்பந்தங்கள் இருவகையாகப் பிரிக்கப்படுகின்றது.

1. இருபக்க வர்த்தக ஒப்பந்தங்கள் (Bilateral Trade Agreements)
2. பல்பக்க வர்த்தக ஒப்பந்தங்கள் (Multilateral Trade Agreements)

**இருபக்க வர்த்தக ஒப்பந்தங்கள்** (Bilateral Trade Agreements)

இரண்டு நாடுகள் மூலம் வர்த்தகம் மற்றும் நிதி நடவடிக்கைகள் தொடர்பாக ஏற்படுத்திக் கொள்ளப்படும் ஒப்பந்தம் இருபக்க வர்த்தக ஒப்பந்தம் எனப்படும்.

உதாரணம்:-

- இந்தியா - இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் (ISFTA) சகவாழ்வு பொருளாதார ஒழுங்கொன்றைப் பேணிக்கொண்டு இரு நாடுகளுக்கிடையிலான பொருளாதார ஒத்துழைப்பை விருத்தி செய்தல் வலயத்தின் வர்த்தக நடவடிக்கைகளில் காணப்படுகின்ற தடைகளை நீக்குவதன் மூலம் பொருளாதார அபிவிருத்தியைத் துரிதப்படுத்துவதற்காக இந்தியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுக்கிடையில் 1998.12.28 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டு 2000.03.21 ஆம் திகதி முதல் செயற்படுத்தப்பட்டு வருவதான ஒப்பந்தம் இதுவாகும்.

- பாக்கிஸ்தான்- இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் (PSFTA) பொருட்களின் வர்த்தகத்தை விரிவுபடுத்துவதன் மூலம் பாக்கிஸ்தானுக்கும். இலங்கைக்கும் இடையிலான பொருளாதாரத்

தொடர்புகளை நாடுகளுக்கிடையில் 2002.08.01 இல் கைச்சாத்திடப்பட்டு 2005.02.09 ஆம் திகதி முதல் செயற்பட்டு வருவதான ஒப்பந்தம் இதுவாகும்.

**பல்பக்க ஒப்பந்தங்கள்/ பிராந்திய ஒப்பந்தங்கள்** (Multilateral Trade Agreements)

பல நாடுகள் தொடர்பு கொள்கின்ற சர்வதேச வர்த்தக அமைப்புக்கள் மற்றும் குழுக்களுடன் வர்த்தகம் மற்றும் நிதி நடவடிக்கைகள் தொடர்பாக ஏற்படுத்திக் கொள்ளும் ஒப்பந்தம் இதுவாகும். அவையாவன,

- **பொதுத்துறைகள், தொழில்நுட்பம் மற்றும் பொருளாதார ஒத்துழைப்பிற்கான வங்காள விரிகுடா நாடுகளின் ஒப்பந்தம் (BIMSTEC)**

வங்காள தேசம், இந்தியா, மியன்மார், இலங்கை, தாய்லாந்து, நேபாளம், மற்றும் பூட்டான் ஆகிய நாடுகள் பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பினை வழங்கும் நோக்குடன் வியாபார முதலீடு, தொழில்நுட்பம், போக்குவரத்து, தொடர்பாடல், வலுச்சக்தி, சுற்றுலாக் கைத்தொழில், நீரியல் வளங்கள் ஆகிய துறைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையீல் 1997.06.06 இல் உருவாக்கப்பட்ட ஒப்பந்தம் இதுவாகும்.

- **தென்னாசிய சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் (SAFTA)**

1995 ஆம் ஆண்டில் பங்காளதேஷ், பூட்டான், இந்தியா, மாலைதீவு, நேபாளம், பாக்கிஸ்தான் மற்றும் இலங்கை ஆகிய நாடுகள் ஒன்றிணைந்து தென்னாசிய வலய ஒத்துழைப்புச் சங்கத்தினை (SAARC) உருவாக்கின சார்க் அமைப்பின் நாடுகள் மூலம் தென்னாசிய முன்னுரிமை வர்த்தக ஒப்பந்தம் 1995 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது.

வர்த்தகத் தடைகளை நீக்குதலும், நாடுகளின் எல்லைகளுடாக வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்களுக்கு வசதிகளை வழங்குதல், அங்கத்துவ நாடுகளின் பொருளாதார மட்டம் மற்றும் அவற்றின் பொருளாதார அபிவிருத்தி ஒழுங்குமுறை என்பவற்றைக் கருத்திற் கொண்டு சுதந்திரமானதும் நியாயமானதுமான வர்த்தகமொன்றை உருவாக்குவதற்கும் வர்க்கத்தின் நன்மைகளை சமனான முறையில் அந் நாடுகளுக்கிடையே பகிர்ந்தளிப்பதற்கும் வழிசெய்தல் என்பவை இவ் ஒப்பந்ததின் நோக்கங்களாகும்.

- **வட அமெரிக்க சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் (NAFTA)**

ஐக்கிய அமெரிக்க குடியரசு, கனடா, மெக்சிகோ, ஆகிய நாடுகள் ஒன்றிணைந்து வடஅமெரிக்க சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தினை 1993ம் ஆண்டில் கைச்சத்திடப்பட்டு 1994.01.01 முதல் இவ் ஒப்பந்தத்தை செயற்படுத்தி வருகின்றது.

தீர்வை மற்றும், தீர்வையல்லாத தடைகளை நீக்குதல், ஒப்பந்தத்துடன் தொடர்புடைய நாடுகளிடையே முதலீடுகள் செய்வதற்குரிய தடைகளை நீக்குதல், பிராந்தியத்தினுள் வர்த்தகத்தை விருத்தி பெறச்செய்தல், ஒப்பந்தத்துடன் தொடர்புடைய நாடுகளிடையே பொருளாதார ஒத்துழைப்பை விருத்தி பெறச் செய்தல் ஆகியவற்றை நோக்காகக் கொண்டு இவ் ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

- **ஆசிய பசுபிக் பொருளாதார கூட்டுறவு (APEC)**

ஆசிய பசுபிக் பிராந்தியத்திற்குட்பட்ட ஜப்பான், கொரியா, மலேசியா, மெக்சிகோ, நியூசிலாந்து, பப்புவா நியூகினியா, பெரு, பிலிப்பைன்ஸ், ரஷ்யா, சிங்கப்பூர், தாய்லாந்து, ஐக்கிய அமெரிக்க குடியரசு, வியட்னாம், அவுஸ்ரேலியா, புருணை, கனடா, சிலி, சீனா, கொங்கொங், இந்தோனேசியா, தாய்வான் ஆகிய 21 நாடுகள் அங்கத்துவம் பெறுகின்ற 1989 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட அமைப்பு இதுவாகும்.

பூரண கட்டில்லா வர்த்தக வலயங்களை உருவாக்குதல், சுங்க நடவடிக்கைகளை முறைமைப்படுத்துதலும், தளர்த்தலும், கணனித் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி வர்த்தகத்தை சுதந்திரமானதாக அமைத்தல் வறிய மாணவர்களுக்கான நலன்புரி நடவடிக்கைகளை உயர்மட்டத்துக்குள் கொண்டுவரல் ஆகியவற்றினை அடிப்படை நோக்காகக் கொண்டு இயங்கிவரும் வர்த்தக சமூகம் இதுவாகும்.

- **சர்வதேச நிதி அமைப்புக்கள்**

உலகப்பொருளாதார முறைமைகளை நிர்வகிக்கவும், ஒழுங்குபடுத்தவும் உதவுவதற்கான சர்வதேச நிறுவனங்களாக சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி மற்றும் உலக வர்த்தக நிறுவனம் போன்றவற்றினைக் குறிப்பிடலாம்.

- **சர்வதேச நாணய நிதியம் (IMF)**

அங்கத்துவ நாடுகளின் நிதிப்பற்றாக்குறையினைத் தீர்ப்பதற்காக குறுங்காலக் கடன் வழங்குதலை அடிப்படையாகக் கொண்டு 1945இல் சர்வதேச நாணய நிதியம் உருவாக்கப்பட்டது.

IMF ஆனது உதவிகோருகின்ற தனது உறுப்பு நாடுகளுக்கு நிதி உதவிகளை வழங்கும் அதேவேளை உறுப்பு நாடுகள் தமது பொருளாதாரத்தினை ஸ்திரப்படுத்துவது தொடர்பில் குறிப்பிட்ட கொள்கைகளைப் பின்பற்றுவதற்கு உடன்படுத்தல் அவசியமானதாகும். IMF இல் ஒரு நாடு இணைந்தவுடன் அது குறிப்பிட்டளவு பணித் தொகையினைப் பங்களிப்புச் செய்யும் அது கோட்டா என்று அழைக்கப்படுகின்றது. அது தேசிய வருமானம், நிதி ஒதுக்கங்கள், வர்த்தக நிலுவை மற்றும் பொருளாதார குறிக்காட்டிகளின் ஒரு பங்களிப்பாகும்.சர்வதேச நாணய நிதியத்தின் பிரதான குறிக்கோள்கள்

- நாடுகளுக்கிடையிலான போட்டிகரமான பெறுமதியிறக்கங்களினால் தடங்கல்களாக காணப்பட்ட நிலையிலிருந்து செலாவணியின் உறுதிதி தன்மையினை மேம்படுத்துவது.
- சர்வதேச வர்த்தகத்தின் விரிவாக்கத்தினையும் சமமான வளர்ச்சியினையும் ஊக்குவித்தல்.
- சென்மதி நிலுவை தொடர்பில் பிரச்சினைகளை எதிர்கொள்ளும் அங்கத்துவ நாடுகளுக்கு வளங்களை வழங்குவது.
- சர்வதேச நாணயக் கூட்டுறவை ஏற்படுத்தல்
- பல்பக்க கொடுப்பனவுகளை ஸ்தாபித்தல

## உலக வங்கி (World Bank)

உலக மகா யுத்தத்தின் பின்னர் உருவாக்கப்பட்ட மற்றுமொரு நிறுவனம் இதுவாகும். இது 1945 ஜுலை இல் ஸ்தாபிக்கப்பட்டது. உலகயுததத்தினால் அழிவுக்குட்பட்ட நாடுகளின் மறுசீரமைப்பு மற்றும் அத்தகைய யுத்தம் மீண்டும் ஏற்படுவதைத் தவிர்த்தல், புனர்வாழ்வு போன்ற நோக்கங்களை அடைந்து கொள்வதற்கான தீர்மானத்தினால் இது உருவாக்கப்பட்டது. 1950 இல் வங்கியானது பொதுத்துறை நிகழ்ச்சித் திட்டங்களாகிய வலுமற்றும் வீதியமைப்பு போன்ற திட்டங்களில் கவனச்செலுத்தியது. 1960 களில் வங்கியானது விவசாயம், கல்வி, சனத்தொகைக் கட்டுப்பாடு நகர அபிவிருத்தி போன்றவற்றுக்கும் கடன் வழங்கியது. உலக வங்கியானது IBRD மற்றும் IDA ஆகிய அமைப்புக்களை உள்ளடக்கியதாகும்

உலக வங்கியின் அடிப்படை நோக்கங்கள்.

- அங்கத்துவ நாடுகளின் உற்பத்தி நடவடிக்கைகளுக்கான மூலதன வசதி செய்து கொடுத்தல் மூலம் அவற்றின் பொருளாதார அபிவிருத்தியைத் துரிதப்படுத்தல்.
- இலகுவான நிபந்தனையின் கீழ் வெளிநாட்டு முதலீடு அங்கத்துவ நாடுகளுக்குக் கிடைக்காத போது வெளிநாட்டு தனியார் முதலீடுகளை ஊக்குவிப்பதற்காக வசதிகளையும், சந்த்பங்களையும் ஏற்படுத்தல்.

- தனியார் முதலீடுகளுக்கு மேலதிகமான வங்கியின் நிதியையும் வேறு வழிகளில் இருந்து கிடைக்கின்ற நிதிகளையும் பயன்படுத்தி அங்கத்துவ நாடுகளுக்கு வினைத்திறனுள்ள உற்பத்தி நடவடிக்கைகளுக்காக நீண்டகாலக் கடன் வழங்குதல்.
- அங்கத்துவ நாடுகளுக்கு கைத்தொழில் மற்றும் தொழில்நுட்ப ஆலோசனை சேவைகளைப் பெற்றுக்கொடுத்தல்.
- அங்கத்துவ நாடுகளின் உற்பத்தி வளங்களை விருத்தி செய்து கொள்வதற்காக சர்வதேச முதலீடுகளை ஊக்குவிப்பதன் மூலம் சர்வதேச வர்த்தகத்தின் சமநிலையை அல்லது வளர்ச்சியை ஏற்படுத்தல்.

**உலக வர்த்தக நிறுவனம் (WTO)**

சர்வதேச வர்த்தகப் பாதுகாப்பு செயற்பாட்டைத் தளர்த்தும் நோக்கிலும் சர்வதேச வர்த்தகத்தை கண்காணிப்பதற்கும் செயற்படுத்துவதற்கான பிரதான நிறுவனமான உலக வியாபார அமைப்பு 01.01.1995 இல் உருவாக்கப்பட்டது.

உலக வர்த்தக நிறுவனத்தின் நோக்கங்கள்

- சுதந்திர வர்த்தகத்திற்கு தடையாக அமையும் தீர்வை வரிகளைக் குறைத்து சர்வதேச வர்த்தகத்தை விரிவாக்குதல்.
- சர்வதேச வர்த்தகத்தில் விவசாயம், வர்த்தக முதலீடு போன்ற துறைகளில் சுதந்திர வர்த்தகத்தை விஸ்தரித்தல்.
- வர்த்தகத்தில் பாதிப்பை ஏற்படுத்தும் தீர்வை வரியல்லாத தடையாகக் கருதப்படக் கூடிய குவித்தல் ஏற்றுமதிக் கோட்டா, உற்பத்தி தரப்படுத்தல் நியமங்களை அமுலாக்குதல் போன்றவற்றை நீக்குவதற்கு கவனம் செலுத்தல்.
- வர்த்தகத்தீலான சமமின்மைகளை நீக்குதல்
- சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி உள்ளடங்கலாக சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனங்களுடன் அன்யோன்யமாக செயற்படுத்துதல்.

சவால் மிக்க உலக சந்தையில் போட்டியிட்டுவருகின்ற இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு இவ்வாறான சர்வதேச ஒப்பந்தங்களும் நிதி அமைப்புக்களும் மிகவும் முக்கியமான தொன்றாகும்.

**சர்வதேச நிதி அமைப்புக்களின் பெயர்கள்**

| **சர்வதேச நிதி அமைப்புக்களின் பெயர்கள்** | **சர்வதேச நிதி அமைப்புக்களின் பெயர்கள் (in English)** | **இலட்சணை (Logo)** |
|---|---|---|
| சர்வதேச நாணய நிதியம் | International Monetory Fund | |
| உலக வங்கி | World Bank | |
| உலக வர்த்தக நிறுவனம் | World Trade Organizations | |

**உசாத்துணைகள்**


- *http://winglobal.ca/multinational_and_bilateral_trade_agreements_and_their_effects_on_your_business/*
- *https://en.wikipedia.org/wiki/International_Monetary_Fund*
- *http://www.simplynotes.in/e-notes/mbabba/international-business-management/world-bank/*
- *http://www.managementparadise.com/forums/export-import-procedures-notes/201723-objectives-sapta.html*
- *https://en.wikipedia.org/wiki/Bay_of_Bengal_Initiative_for_Multi-Sectoral_Technical_and_Economic_Cooperation*

*Leader News Letter, Issue 20, December/2018, ISSN 2279-3305*

# மனிதவள முகாமைத்துவத்தின் தொழிற்பாடுகள்

# Human Resource Management Functions

கதளுவாகே சமிலா தில்ருக்ஷி & கதிரேசன் பௌரணி
உதவி விரிவுரையாளர்கள்,
வர்த்தக முகாமைத்துவ பீடம்,
கிழக்கு பல்கலைக்கழகம், இலங்கை.

இக்கட்டுரையின் முக்கிய நோக்கமானது மனிதவள முகாமைத்துவத்தின் செயல்பாடுகள் மற்றும் அவை எவ்வாறு தொடர்புபடுத்தப்படுகின்றன என்பதனை ஆராய்வதாகும். மனித வளங்களே ஒரு நிறுவனத்தின் மிகப்பெரிய சொத்துக்களாகும். ஒரு வணிக நிறுவனமொன்றின், பணபரிமாற்றத்தை நிர்வகித்தல்( managing cash flow ), வணிகம் தொடர்பான பரிவர்த்தனைகளை செய்தல் (making business transactions), வாடிக்கையாளர்களை கையாளுதல்( dealing with customers ) மற்றும் அனைத்து வகையான சமூக ஊடகங்களின் மூலம் தொடர்புகொள்ளுதல்( communicating through all forms of media) போன்ற தினசரி வணிக நடவடிக்கைகளை மனிதவளங்களை கொண்டே பூர்த்தி செய்யப்படுகின்றது.

ஒவ்வொரு நிறுவனமும் அதன் மனித வளங்களை திறம்பட நிர்வகிக்க வேண்டும். ஏனென்றால் போட்டி தன்மை வாய்ந்த சூழலில் அமைப்பொன்றின் வெற்றியானது மனிதவள காரணிகளின் மூலமே தீர்மானிக்கப்படுகின்றது. ஏனெனில் ஏனைய காரணிகளான நிதி, தொழில்நுட்பம் மற்றும் ஏனைய அனைத்து காரணிகளும் எல்லா நிறுவனங்களுக்கும் பொதுவானவையாகும்.

அதன் அடிப்படையில் மனிதவள முகாமைத்துவமானது ஒரு நிறுவனமொன்றின் நோக்கம் மற்றும் இலக்குகளை அடைந்துகொள்வதற்காக மனிதவளங்களை வினைத்திறன் மற்றும் விளைத்திறனாக பயன்படுத்துதல் ஆகும். அத்துடன் மனிதவள முகாமைத்துவமானது ஒரு திட்டமிட்ட செயல்முறையாகும். ஆகையால் நிறுவனமொன்றின் ஊழியர்களை நிர்வகிப்பதற்காக மனிதவள திணைக்களமானது பல்வேறு மனிதவள தொழிற்பாடுகளை செயல்படுத்துகின்றது.

**மனிதவள முகாமைத்துவத்தின் தொழிற்பாடுகள்**

- பணியமர்த்தல் (Staffing)
- மனிதவள அபிவிருத்தி (Human Resource Development)
- கொடுப்பனவு/சம்பளம் மற்றும் நன்மைகள் (Compensation & Benefits)
- பாதுகாப்பு மற்றும் உடல்நலம்(Safety & Health)
- ஊழியர் மற்றும் தொழிலாளர் உறவுகள்(Employee & Labor Relations)
- மனிதவள ஆராய்ச்சி (Human Resource Research)

- **பணியமர்த்தல் (Staffing)**

பணியமர்த்தலானது ஒரு முகாமைத்துவ தொழிற்பாடாகும். இது நிறுவனமொன்றில் காணப்படும் தொழில் நிலைகளை (positions of an organization) பூர்த்தி செய்வதற்காக தகுதி வாய்ந்த ஊழியர்களை பெறுதலும், பயன்படுத்தலும், தக்க வைத்தலும் ஆகும். குறிப்பாக சொல்வதாயின் பணியமர்த்தல் என்பது தொழில் நிலைகளை பூர்த்தி செய்வதற்காக சரியான முறையில் சரியான பணியில் சரியான நபரை நியமித்தலாகும். இதனடிப்படையில் பணியமர்த்தலின் கீழ் பின்வரும் உப மனிதவள தொழிற்பாடுகள் செயல்படுகின்றன.

- **வேலை பகுப்பாய்வு(Job Analysis)** - வேலை பகுப்பாய்வின் மூலம் ஒரு நிறுவன வேலைக்கு தேவையான அறிவு, திறன் மற்றும் கடமைகள் உறுதிசெய்யப்படுகின்றது.
- **மனிதவள திட்டமிடல் ( Human Resource Planning (HRP))-** மனிதவள திட்டமிடல் என்பது தொழில் நிலைக்க தேவையான அறிவு, திறன் மற்றும் கடமைகளை மதிப்பாய்வு செய்வதாகும்.
- **ஆட்சேர்ப்பு(Recruitment)-** நிறுவனத்திற்கு தேவையான வேலைகளுக்கான விண்ணப்பிப்பதற்காக ஒப்பீட்டளவில் அதிக எண்ணிக்கையான விண்ணப்பதாரர்களை ஈர்க்கும் மற்றும் ஊக்குவிக்கும் செயல் முறையாகும்.
- **தேர்வு(Selection)-** தேர்வு என்பது இறுதி பணியமர்த்தல் செயற்பாடாகும். இதில் வேலைக்கு பொருத்தமான விண்ணப்பதாரர்களை, வேலைக்கு விண்ணப்பித்த குழுவிலிருந்து தெரிவு செய்தலாகும்.

**மனிதவள அபிவிருத்தி (Human Resource Development)**

மனிதவள முகாமைத்துவத்தின் செயல்பாடுகளில் ஒன்றான மனிதவள திணைக்களத்தினால் செயற்படுத்தப்படுகின்ற ஊழியர் பயிற்சி மற்றும் அபிவிருத்தியானது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இச்செயல்பாடானது ஊழியர் தொழில்சார் திட்டமிடலுடன் இணைந்தே செயற்படுத்தப்படுகின்றது. இதன் காரணமாக, செயல்திறன் மதிப்பீடு (performance appraisals ) உள்ளிட்ட சில செயல்பாடுகள் குறிப்பிட்ட ஊழியர்களின் பயிற்சி மற்றும் அபிவிருத்தி தேவைகளை இனங்கண்டுகொள்வதற்காக செயற்படுத்தப்படுகின்றது.

இப்பயிற்சி நெறியானது, குறிப்பிட்ட ஊழியர்களின் தற்போதைய தொழில் நிலைகளுக்கு தேவையான அறிவு மற்றும் திறன்களை வழங்கும் நோக்குடன் ஒழுங்கமைக்கப்பட்டிருக்கும். எனினும் அபிவிருத்தியானது பயிற்சி நெறியினை விட விரிவானதாகவே காணப்படும். ஏனெனில், ஊழியர்களுக்கு எதிர்காலத்தில் மிகவும் சிக்கலான கடமைகளை நிறைவேற்றுவதற்கு போதுமான அறிவை வழங்க வேண்டும் .

மனிதவள அபிவிருத்தியின் மூலம் தனிப்பட்ட மற்றும் குழுவான ஊழியர்கள் பயனடைவார்கள். ஆகவே இவர்களது செயல்திறன் நிறுவனத்தின் வளர்ச்சிக்கு உதவியாக இருக்கும்.

தொழில் திட்டமிடல் ( Career planning) என்பது ஊழியர்கள் தனது தொழிலின் குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை சரியான முறையில் நிறைவேற்றிக்கொள்வதற்கு தேவையான வழிமுறையினை சுட்டிக்காட்டுகின்றது. செயல்திறன் மதிப்பீடானது (performance appraisals ) ஊழியர்களின் செயல்திறன் நிலையை (performance level) உறுதி செய்வதற்காக பயன்படுத்தப்படுகின்றது.

**கொடுப்பனவு/சம்பளம் மற்றும் நன்மைகள்( Compensation & Benefits)**

மனிதவள முகாமைத்துவத்தின் செயல்பாடுகளில் கொடுப்பனவு.்.சம்பளம் மற்றும் ஊழியர் நன்மைகள் முக்கிய பங்கினையாற்றுகின்றது. கொடுப்பனவு என்பது ஊழியர் ஒருவரின் வேலைவாய்ப்பின் விளைவாக பெற்றுக்கொள்ளப்படுகின்ற அனைத்து வெகுமதிகளும் (rewards) ஆகும். இவ்வெகுமதிகள் பின்வருமாறு வகைப்படுத்தப்படுகினறது. அவை, நிதி வெகுமதிகள்( financial rewards) (அடிப்படை ஊதியம்- base pay , ஊக்கங்கள்- incentives , வாழ்க்கை செலவு படிகள்- cost of living), ஊழியர் நன்மைகள் (நோய் விடுமுறைகள்- sick leaves, , விடுமுறை மற்றும் மருத்துவ காப்பீடு- holiday& medical insurance) மற்றும் நிதி அல்லாத ஊக்கங்கள் சௌகரியமான வேலைச்சூழல்( pleasant working environment) மற்றும் மகிழ்ச்சிகரமான பணியாற்றல் (delightedness of work performed)).

**பாதுகாப்பு மற்றும் உடல்நலம்( Safety & Health)**

இத்தொழிற்பாடானது உழைக்கும் சூழலில் உள்ள கடுமையான விபத்துக்களிலிருந்து ஊழியர்களை எவ்வாறு பாதுகாத்துக்கொள்ளுதல் என்பதாகும். உடல்நலம் என்பது பாதுகாப்பிலிருந்து சிறிது வேறுபட்டது. அது உடல் மற்றும் மனநலம் ரீதியான நோய்களிலிருந்து விடுபட உதவும். ஊழியர் பாதுகாப்பு மற்றும் சுகாதாரப்பிரச்சினைகள் மனிதவள துறைக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாகும். ஏனெனில், நிறுவனமொன்றின் நீண்டகால வேலைச்சூழலில் அவ் நிறுவனத்தின் உற்பத்தித் திறன் மற்றம் செயல்திறனை அதிகரிப்பதற்கு ஊழியர் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் மிகவும் அவசியமானதாகும்.

**ஊழியர் மற்றும் தொழிலாளர் உறவுகள்( Employee & Labor Relations)**ஊழியர் தொழிற்சங்கங்கள் பல ஆண்டுகளாக பிரபலமடைந்து கொண்டு வருகிறது. தற்போது நிறுவனங்களில் ஊழியர்கள் தனது உரிமைகளை பெற்றுக்கொள்வதற்காக, இத் தொழிற்சங்கங்களானது கட்டாய சட்டமாக்கப்பட்டுள்ளது. இதற்கமைய நிறுவனங்களில் ஊழியர்கள் தொழிற்சங்கங்களில் சேர விரும்பினால், அவ்வமைப்புக்கள் அவர்களுக்கு எதிர்ப்பு தெரிவிக்க முடியாது.

**மனிதவள ஆராய்ச்சி (Human Resource Research)**

மனிதவள ஆராய்ச்சியானது ஒரு மனிதவள முகாமைத்துவத்தின் செயல்பாடாக பரிந்துரைக்கப்படவில்லை. எனினும் இது மனிதவள முகாமைத்துவத்தின் செயல்பாடாகவே கருதப்படுகிறது. ஏனெனில், இது மனிதவள துறை சார்ந்த பல சிக்கலான பிரச்சினைகளுக்கு பல சிறந்த தீர்வுகளை வழங்கியுள்ளது.

**மனிதவள முகாமைத்துவத்தின் தொழிற்பாடுகளுக்கிடையிலான தொடர்புகள்.**

மனிதவள முகாமைத்துவத்தின் அனைத்து தொழிற்பாடுகளும் ஒன்றுடனொன்று தொடர்புடையதாகவே காணப்படுகின்றது. நிறுவனமானது தன்னிச்சையாக ஒரு முடிவை எடுக்க முடியாது. அவ்வாறு நிறுவனமானது தன்னிச்சையாக ஒரு முடிவை எடுக்குமாயின் அது நிறுவனத்தின் பல பகுதிகளை பாதிக்க கூடும். எனவே சில குறிப்பிட்ட கொள்கைகள் மற்றும் ஊழியர்களுக்கான விதிமுறைகளை நிர்வகிப்பதில் நிர்வாகம் கவனம் செலுத்த வேண்டும். உதாரணமாக, வேலை பகுப்பாய்வு(Job Analysis) தரவை அடிப்படையாக கொண்டு மனிதவள திணைக்களத்தினால் வேலைகளை வடிவமைத்து, அதற்கு தகுந்த அறிவு மற்றும் திறன் உடைய ஊழியர்களை தெரிவுசெய்தல். அதேபோல் செயல்திறன் மதிப்பீட்டு (performance appraisals ) தகவல்களை அடிப்படையாக கொண்டு பயிற்சி தேவைகள், இழப்பீட்டு திட்டங்கள் மற்றும் தொழில் அபிவிருத்தி திட்டங்கள் போன்றவற்றை இனங்காண உதவியாக அமையும். அவ்வாறே வெற்றிகரமான பயிற்சி மற்றும் அபிவிருத்தி திட்டங்கள், ஊழியர்களின் செயல்திறனை அதிகரிக்க உதவுவதோடு, அதனை அடிப்படையாக கொண்டு அவர்களது ஊதியத்தை அதிகரிக்கவும் அவர்களது தொழில் மேம்படுத்தலுக்கும் உதவியாகவும் உள்ளது. மேலும் ஒரு நிறுவனத்தின் பாதுகாப்பு மற்றும் சுகாதார பிரச்சினைகள் தொடர்பாக ஊழியர்களுக்கு பயிற்சியளிப்பதன் மூலம் அவர்கள் அதனை அறிந்து கொண்டு தங்களது பாதுகாப்பினை உறுதி செய்ய முடியும். இவ்வழிகளினூடாகவே மனிதவள முகாமைத்துவத்தின் தொழிற்பாடுகள் ஒன்றுடனொன்று தொடர்புபடுகின்றது.

**உசாத்துணைகள்:**


- *https://medium.com/@swaticbindia/human-resource-management-its-core-functions-managerial-operative-fc0335ef616a*
- *http://www.whatishumanresource.com/Human-Resource-Management-functions*
- *http://www.yourarticlelibrary.com/hrm/human-resource-management-functions-managerial-operative-and-advisory-function/27995*

# இலங்கையின் பொருளாதாரத்தில் சிறிய நடுத்தரளவு வணிகங்களின் பங்களிப்பு
# The role of Small and Medium Enterprises in Sri Lankan Economy

அப்புகாமி ஆராசிலாகே சந்திரா குமாரி & கணேசன் சுகன்யா
உதவி விரிவுரையாளர்கள்,
வர்த்தக முகாமைத்துவ பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

இலங்கையின் பொருளாதார விருத்திக்கு சிறிய நடுத்தரளவு வணிகங்களின் பங்களிப்பானது மிக முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாகும். கைத்தொழில் நாடுகளில் கூட முயற்சியாண்மை தொடர்பில் பிரதான மூலமாக இருப்பது சிறிய நடுத்தரளவு வணிகத்துறையாகும். இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கைக்கமைய இலங்கையில் காணப்படும் மொத்த நிறுவனங்களில் 75% ற்கும் அதிகமானவை சிறிய நடுத்தரளவு வணிகங்களாக காணப்படுவதோடு பொருளாதாரத்திற்கு 45% தொழில் வாய்பினை வழங்குவதும் மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தியீல் 52% பங்களிப்பினை வழங்குவதுமான நிறுவனங்கள் இதுவாகும்.

இலங்கையின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாகக் காணப்படும் சிறு வணிகங்களானவை பேரளவு முயற்சியாளர் கருத்தில் கொள்ளாத சந்தையில் காணப்படும் சிறு வெற்றிடங்களைப் பயன்படுத்தி பயனடைவதற்காக பாரம்பரிய தொழில் நுட்பத்தை பயன்படுத்தி மேற்கொள்ளப்படுவதாகும். சிறு வணிகங்களை வேறுபடுத்தி இனங்காண்பதற்கு பல்வேறு அளவீடுகள் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அவற்றுள் அளவு ரீதியான அளவீடுகளாக ஈடுபடுத்தப்பட்ட மூலதனம், ஊழியர்களின் எண்ணிக்கை, வருடாந்த விற்பனைப் புரள்வு, உற்பத்தியின் இயலளவு, பயன்படுத்தப்பட்ட வலு, நிலையான சொத்தின் பெறுமதி ஆகியவற்றையும் பண்பு ரீதியான அளவீடாக பயன்படுத்தப்படும் தொழில் நுட்பம், வணிகத்தின் தன்மை, வணிக அமைப்பு முறை, பயன்படுத்தப்படும் முகாமைத் தொழில் நுட்பம், சந்தையின் தன்மை ஆகியவற்றையும் குறிப்பிடலாம்.

இலங்கையில் சிறு வணிகங்களை இனங்காண்பதற்கு சில நிறுவனங்கள் சில கணிய ரீதியான அளவீடுகளை வெளியிட்டுள்ளன. அவையாவன,

- **கைத்தொழில் அபிவிருத்தி சபை**

  ஈடுபடுத்தியுள்ள மூலதனம் ரூபா 4மில்லியன்களுக்கு அதிகமாகாத வணிகங்கள் சிறு வணிகங்களாகும்.

- **கைத்தொழில் நுட்ப நிறுவனம்**

  ஈடுபடுத்தியுள்ள மூலதனம் ரூபா 4மில்லியன்களுக்கு அதிகமாகாத வணிகங்கள் சிறு வணிகங்களாகும்.

- **சிறு கைத்தொழில் திணைக்களம்**

  ஈடுபடுத்தியுள்ள மூலதனம் ரூபா 4மில்லியன்களுக்கு அதிகமாகாத வணிகங்கள் சிறு வணிகங்களாகும்.

- **கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு**

  ஈடுபடுத்தியுள்ள மூலதனம் ரூபா 20மில்லியன்களுக்கு அதிகமாகாத வணிகங்கள் சிறு வணிகங்களாகும்.

- **சனத்தொகை புள்ளிவிபரத்திணைக்களம்**

  ஊழியர் எண்ணிக்கை 25லும் குறைவான நிறுவனங்கள் சிறு வணிகங்களாகும்.

- **கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு**

  நிரந்தரமான ஊழியர் எண்ணிக்கை 50லும் குறைவான நிறுவனங்கள் சிறு வணிகங்களாகும்.

- **இலங்கை மத்திய வங்கி**

  பயன்படுத்தும் மின்சார இயலுமை 50கிலோவாட் அம்பியர்கும் குறைவான நிறுவனங்கள் சிறு வணிகமாகும்.

**இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு சிறு வணிகங்கள் பின்வரும் வகையில் பங்களிப்பு செய்கின்றன**.

- வேலை வாய்ப்புகளை வழங்குதல்
- வறுமையை ஒழித்தல்
- தனியார் முயற்சியினால் புதிய உற்பத்திகள் அறிமுகப்படுத்தப்படல்
- பேரளவு உற்பத்தி நிறுவனங்களுக்கு அவசியமான பொருளாதார சேவைகளை வழங்குதல்.
- வினைத்திறன் அதிகரிப்பும் இலாபத்தன்மை அதிகரிப்பும்.
- நெகிழ்ச்சித் தன்மை கொண்டதாக இருத்தல்.
- உள்நாட்டு வளப்பயன்பாடு அதிகரித்தல்.

இலங்கையின் பொருளாதாரத்திற்கு பல்வேறு வகையான பங்களிப்பினை சிறு வணி வணிகங்கள் வழங்குகின்ற போதிலும் நிதிப் பற்றாக்குறை, முறையான வணிக திட்டமொன்று இல்லாமை, அடிக்கட்டமைப்பு வசதிகள் போதாமை, நவீன தொழில் நுட்பம் பயன்படுத்தப்படாமை, சந்தைப்படுத்தல் பிரச்சினை, இலக்கு வாடிக்கையாளர்களை தக்க வைத்துக் கொள்ள இயலாமை

ஆகிய பிரச்சினைகளை எதிர்நோக்குகின்ற நிலையும் காணப்படுகின்றது. எனவே இவ் பிரச்சினைகளை நிவர்த்தி செய்து சிறந்த முறையில் செயற்படுத்துவதற்காக கீழ்வரும் சேவைகளை பல்வேறு நிறுவனங்கள் வழங்குகின்றன.

1) **ஆலோசனை சேவை**

- கைத்தொழில் அபிவிருத்தி சபை
- கைத்தொழில் நுட்ப நிறுவனம்
- ஏற்றுமதி அபிவிருத்தி சபை
- தேசிய வணிக முகாமைத்துவ நிறுவனம்
- இலங்கை வணிக அபிவிருத்தி நிறுவனம்
- தேசிய பொதியிடல் மத்திய நிறுவனம்
- இலங்கை தரப்படுத்தல் நிறுவனம்

2) **தொழில் நுட்ப சேவை**

- கைத்தொழில் அபிவிருத்தி சபை
- இலங்கை தேசிய பொறியியல் ஆராய்ச்சி அபிவிருத்தி மையம்
- கைத்தொழில் நுட்ப நிறுவனம்
- இலங்கை குடிசைக் கைத்தொழில் சபை
- தேசிய பொதியிடல் மத்திய நிலையம்
- தேசிய இளைஞர் சேவை மன்றம்

3) **சந்தைப்படுத்தல் வசதி**

- ஏற்றுமதி அபிவிருத்தி சபை
- இலங்கை குடிசைக் கைத்தொழில் சபை
- கைத்தொழில் அபிவிருத்தி சபை

4) **அடிக்கட்டமைப்பு வசதிகள்**

- பிரதேச கைத்தொழில் சேவை மத்திய நிலையம்
- இலங்கை முதலீட்டு சபை
- கைத்தொழில் அபிவிருத்தி சபை

5) **நிதி வசதி**

- முயற்சியான்மை மூலதனக்கம்பனி
- தேசிய அபிவிருத்தி வங்கி
- DFCC வங்கி
- வணிக வங்கி
- SMED நிறுவனம்

**உசாத்துணைகள்:**


- *http://www.industry.gov.lk/web/images/pdf/framew_eng.pdf*
- *http://www.nhrep.gov.lk/index.php?option=com_content&view=article&id=81&Itemid=59&lang=en*
- *https://www.researchgate.net/publication/245023746_the_status_of_small_and_medium_enterprises_and_promotions_for_their_growth_in_srilanaka*
- *https://www.kub-uk.net/challenges-facing-small-and-medium-sized-businesses/*